# அறிவித்தல்

## மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்

## சங்கீதம் கலைமாணி சிறப்பு பட்டம் (Uni – code 068C)

**பல்கலைக்கழக அனுமதி 2022/2023 கல்வியாண்டு ( 2022 க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில்)**

**திறன் தேர்வுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன**

2022 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/தரம்) பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் , ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2022/2023 கல்வியாண்டுக்கான பின்வரும் தகுதிகளைப் பெற்றவர்கள், மற்றும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்ட பல்கலைக்கழக சேர்க்கைக்கான தகுதிகளை பூர்த்தி செய்தவர்களிடமிருந்து திறன் தேர்வுக்கான **விண்ணப்பங்கள் 15.09.2023 முதல் வரவேற்கப்படுகின்றன**.

விண்ணப்பிக்கும்போது உத்தர பாரத சங்கீதம், வயலின், சிதார், தபேலா ஆகிய பாடங்களில் ஒன்றை முக்கியப் பாடமாகப் படிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே இந்தப் படிப்புக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

1. அனுமதிக்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகள்,

   (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட "இலங்கைப் பல்கலைக்கழகங்களின் இளங்கலைப் பாடநெறிக்கு படிப்புகளுக்கான சேர்க்கை, கல்வியாண்டு 2022/2023 க.பொ.த (உ/தரம்) 2022" என்ற மாணவர் கையேட்டின்படி பல்கலைக்கழகத்தில் சேருவதற்கான குறைந்தபட்ச தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

மற்றும்

2022இல் G.C.E A/L பரீட்சையில் சங்கீத படத்திற்கு குறைந்தபட்சம் கிரெடிட் பாஸ் (C) உடன் மூன்று பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) பல்கலைக்கழக அனுமதிக்கு மேற்கூறிய குறைந்தபட்ச தகுதிகளைப் பெற்ற மாணவர்கள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் திறன் தேர்விலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2. விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரர்கள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் இணைய பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பத்தை **http://fhss.sjp.ac.lk/mct/aptitude-test/** என்ற இணைப்பினூடாக Online மூலம் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசி jpfjp 27.09.2023 ஆகும் .

திறனறித் தேர்வில் பங்கேற்கும் விண்ணப்பதாரர்களிடம் ரூ. 2000.00 வசூலிக்கப்படும். “கணக்கதிகாரி, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்” என்ற பெயரில் கங்கொடவில மக்கள் வங்கியின் கிளையிலுள்ள 097-1-00150005005 என்ற கணக்கிற்கு மக்கள் வங்கியின் ஏதேனும் ஒரு கிளையில் இருந்து பணம் செலுத்தப்பட வேண்டும். வேறு எந்த முறையிலும் பணம் செலுத்துவது ஏற்றுக்கொள்ளப்படாது.

விண்ணப்பதாரர்கள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை விண்ணப்பப் படிவத்துடன் பதிவேற்றம் (Upload) செய்ய வேண்டும் மற்றும் அவற்றின் அசல் பிரதிகளை தகுதித் தேர்வுக்கு தோன்றும் தேதியில் கட்டாயமாக சமர்ப்பிக்க வேண்டும்.

i) மக்கள் வங்கியில் பணம் செலுத்தப்பட்ட ரசீது

iii) தேசிய அடையாள அட்டை

iii) 2022 க.பொ.த (உ/தரம்) பெறுபேற்று அட்டவணை (பாடசாலை பரீட்சாத்தியாக இருந்தால் அதிபராலும் அல்லது தனியார் பரீட்சாத்தியாக இருந்தால் கிராம சேவை அலுவலராலும் சான்றளிக்கப்பட வேண்டும்)

3. அடிப்படை தகுதிகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள், முழுமையற்ற அல்லது தவறான தகவல்களை உள்ளடக்கியவை நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரர்கள் செலுத்திய பணம் திருப்பி செலுத்தப்பட மாட்டாது.

4. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சங்கீதம் கலைமாணி பட்டத்திற்கான திறன் தேர்வில் தோற்றும் அனைத்து மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதிக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

5. இந்த திறன் தேர்வு தொடர்பான மேலதிக தகவல்கள் பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீட இணையப் பக்கத்தில் வெளியிடப்படும்.

(உள்நுழைய:- **http://fhss.sjp.ac.lk/mct/aptitude-test/**)

மேலும், தேர்வு தொடர்பான தகவல்கள் தகுதியான விண்ணப்பதாரர்களின் மின்னஞ்சலுக்கு (Email) மட்டுமே அனுப்பி வைக்கப்படும், தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது. இந்தத் திறன்காண் தேர்வு சிங்கள மொழி மூலம் (அல்லது தேவைப்பட்டால் ஆங்கில மொழி மூலம்) மட்டும் நடாத்தப்படும்.

பதிவாளர்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

கங்கொடவில, நுகேகொட.